Tsi10T

20-09-2024

தென்காசி மாவட்டம்
காலாண்டு பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 10
தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரல் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2) முல்லைத் திணையின் சிறுபொழுது -
அ) யாமம் ஆ) மாலை இ) வைகறை ஈ) எற்பாடு

3) கட்டுரையைப் படித்து, ஆசிரியா மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்
அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு

4) 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்று குறிப்பிடும் நூல்
அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை
இ) திருக்குறள் ஈ) நற்றிணை

5) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

6) 2016-இல் ஐ.பி.எம் நிறுவனம் உருவாக்கிய செயற்கை நுண்ணறிவுக் கணினி
அ) இலா ஆ) பெப்பர் இ) கூகுள் ஈ) வாட்சன்

7) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8) 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது ....... வினா
'அதோ, அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ......... விடை
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

9) மலாகள் தரையில் நழுவும் எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

10) கூற்று 1 போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்
கூற்று 2 அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது
அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

11) எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் - தேமா - மலர் ஆ) கூவிளம் - புளிமா - நாள்
இ) தேமா - புளிமா - காசு ஈ) புளிமா - தேமா - பிறப்பு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*'தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்*
*கொண்டல்கள் முழவி னேங்கக், குவளைகண் விழித்து நோக்க*
*தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ'*

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) கம்பராமாயணம்
இ) மலைபடுகடாம் ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) நப்பூதனார் இ) இளங்கோவடிகள் ஈ) கம்பர்

14) பாடலில் இடம்பெற்றுள் அடிஎதுகைச் சொற்கள் யாவை?
அ) தண்டலை, கொண்டல்கள் ஆ) தண்டலை, தாமரை
இ) தெண்டிரை, தேம்பிழி ஈ) கொண்டல்கள், குவளை

15) 'கொண்டல்' - இச்சொல்லின் பொருள் .........
அ) காற்று ஆ) மேகம் இ) மலர் ஈ) காடு

www.Padasalai.Net www.Trb-Tnpsc.Com



## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**

அ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் ~~குழல் மீன் கறியும் பிறவும்~~ கொடுத்தனர்.

ஆ) வடிவங்களைக் கொண்டு நிகழ்த்துகலைகளை ~~நான்கு~~ வகைகளாகப் பிரிக்கலாம்.

17) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

18) 'பெப்பர்' - குறிப்பு வரைக.

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக

20) செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்துகள் கொண்டு முழக்கத்தொடர்களை உருவாக்குக.

21) உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும் என்னும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்' இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23) **தொடரில் விடுபட்ட இடங்களை வண்ணங்களால் நிரப்புக**

அ) வானம் ............ தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது

ஆ) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ............

24) **கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க**

அ) இயற்கை - செயற்கை  ஆ) சிறு - சீறு

25) **கலைச்சொற்களை தருக.**

அ) Nanotechnology  ஆ) Storyteller

26) 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்து பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

27) **பழமொழிகளை நிறைவு செய்க.**

அ) ஒரு பானை ............  ஆ) உப்பிட்டவரை ............

28) 'பொழிந்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

29) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30) பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்லும் நண்பனிடம் கல்வியின் சிறப்பை எவ்வாறு எடுத்துரைப்பீர்?

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும். ஏனென்றால் வலக்கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம்.

அ) உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தவர்கள் யாவர்?

ஆ) வாழை இலையின் விரிந்த பகுதி எப்பக்கத்தில் வர வேண்டும்

இ) நாம் எவ்வாறு உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) **அடிபிறழாமல் எழுதுக.**

'விருந்தினனாக' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்

**(அல்லது)**

'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

35) 'கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்
காலையில் நீயெழும்பு – வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
மாமழை பெய்கையிலே – உரிச்சொல் தொடர்
மாம்பூவே கண்ணுறங்கு – விளித்தொடர்
பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத் தொடர்
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு' இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

34) 'வேலொடு நின்றான் இடு என்றது போலும் உவமைஅணி.
கோலொடு நின்றான் இரவு' - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37) **அலகிட்டு வாய்பாடு தருக.**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

### பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

39) அ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கைகள் பற்றிச் சிற்றூரில் உள்ள தாத்தா பாட்டிக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) வீட்டு எண் 27, வெண்பாநகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் எழிலரசனின் மகள் யாழினிக்காக, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42) அ) பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்களை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டு வேலைகளைச் செய்தேன் |
| | |
| | |
| | |
| | |

(அல்லது)

மொழிபெயர்க்க

1. Education is what remains after one has forgotten what one has learned in School. - Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week. - Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. - Aristotle
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. - Winston Churchill

பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3×8=24

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44) அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை தருக.

முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

மு. சிவக்குமார், 33/1, மூர்த்தி விநாயகர் கோவில் தெரு நெடுவயல் - 627803 தென்காசி மாவட்டம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

காலாண்டுத் தேர்வு - விடைகள்.

(17) வருக! வருக! பயணம் இனிமையாக இருந்ததா? நன்றாகச் சாப்பிடுங்கள்! உங்களின் வருகை எங்களுக்குப் பெருமை.

(18) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் 'பெப்பர்'. இது உலக அளவில் விற்பனையாகும் ரோபோ. பெப்பரை உணவகங்கள், வணிக நிறுவனங்களில் பயன்படுத்துகின்றனர்.

(19) மருத்துவர், நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்து மருந்து கொடுத்து அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பது. அப்புண் ஆறிவிடும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

(20) அருளைப் பெருக்கி அறிவைத் திருத்து! கல்வியின் ஒளியால் மருளை அகற்று!

(34) உவமை அணி.

விளக்கம் - கூறக்கருதிய பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவது. உவமை உவமேயங்களுக்கிடையால் உவம உருபு வெளிப்படையாக வருவது.

அணிப்பொருத்தம்:-

* ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது - உவமானம்
* வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்யும் திருடர்களுக்குச் சமம் - உவமேயம்
* போல என்பது - உவம உருபு.

(37)

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரைநேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரைநேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரைநேர்நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர்நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரைநேர்நேர் | புளிமாங்காய் |
| தில்/லை | நேர்நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

இக்குறள் நிரை என்னும் அசையுடன் மலர் என்னும் வாய்ப்பாட்டினைக் கொண்டு முடிந்துள்ளது.

நூலக உறுப்பினர் படிவம்

## தென்காசி மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் தென்காசி

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் 175

உறுப்பினர் எண் 003224

1. பெயர் யாழினி
2. தந்தை பெயர் எழிலரசன்
3. பிறந்த தேதி 02-05-2009
4. வயது 15
5. படிப்பு 10ஆம் வகுப்பு
6. தொலைபேசி எண் 98XXXXXXXX
7. முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) 27, வெண்பா நகர், தென்காசி-627811

நான் தென்காசி மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.______ சந்தா தொகை ரூ.______ ஆக மொத்தம் ரூ.______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : வெண்பா நகர்

நாள் : 20/9/24

தங்கள் உண்மையுள்ள

யாழினி

திரு / திருமதி / செல்வி / செல்வன் யாழினி அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

XXXXXX

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

www.Padasalai.Net